## வகுப்பு - 7, 8 - வேதியியல், 3, 9 - நம்மைச் சுற்றியுள்ள பருப்பொருள்கள்

176. புவியில் ஆக்ஸிஜனுக்கு அடுத்து அதிக அளவில் உள்ள தனிமம் எது? (NMMS 2018)

(1) ஹைட்ரஜன் (2) சிலிக்கான் (3) கார்பன் (4) நைட்ரஜன்

177. ஆல் கெமிஸ்டின் காலத்தில் நீரினை குறிக்கும் குறியீடு எது? (NMMS 2018)



(1)



(2)



(3)



(4)

178. பற்களை வலிமையாக வைத்திருக்கப் பற்பசையில் பயன்படுத்தப்படும் வாயு _______. (NMMS 2018)

(1) ஆர்கான் (2) நியான் (3) ஃபுளூரின் (4) பாஸ்பரஸ்

179. கூற்று (A): திண்மங்கள் நீரில் கரைகின்றன. (NMMS 2018)

காரணம் (R): பருப்பொருளில் உள்ள மூலக்கூறுகளுக்கு இடையே இடைவெளி உள்ளது.

(1) (A) சரி (R) தவறு (2) (A) தவறு (R) சரி

(3) (A) மற்றும் (R) தவறு (4) (A) சரி, (R) - (A)-யை விளக்குகிறது

180. மின் சூடேற்றியில் பயன்படும் கம்பிச்சுருள் _______ ஆல் ஆனது. **(NMMS 2015 - 2016)**

(1) டங்ஸ்டன் (2) காப்பர் (3) நிக்ரோம் (4) அலுமினியம்

LIVEWORKSHEETS

181. _______ மாறும்போது பருப்பொருள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றம் அடையும். (NMMS-2016- 17)

(1) அழுத்தம் (2) பருமன் (3) வெப்பநிலை (4) அடர்த்தி

182. உலோகப் பண்புகளையும், அலோகப் பண்புகளையும் பெற்றுள்ள தனிமங்கள் _______ என அழைக்கப்படுகின்றன (NMMS 2019 - 2020)

(1) உலோகக் கலவை (2) உலோகப் போலிகள்

(3) சேர்மங்கள் (4) உலோகவியல்

183. பாய்மம் எனப்படுவது _______. (NMMS - 2018)

(1) வாயுக்கள் மற்றும் திண்மங்கள் (2) நீர்மங்கள் மற்றும் திண்மங்கள்

(3) வாயுக்கள் மற்றும் நீர்மங்கள் (4) வாயுக்கள், திண்மங்கள் மற்றும் நீர்மங்கள்

184. பொருத்துக **(NMMS - 2020 - 21)**

(1) ஓரணு மூலக்கூறு - i. சல்பர்

(2) ஈரணு மூலக்கூறு - ii. மந்தவாயுக்கள்

(3) மூவணு மூலக்கூறு - iii. ஆக்ஸிஜன்

(4) பல் அணு மூலக்கூறு - iv. ஓசோன்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| (1) | ii | iii | iv | i |
| (2) | iii | ii | iv | i |
| (3) | i | ii | iv | iii |
| (4) | iv | ii | i | iii |

185. X - கதிர் இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் உலோகம் _______. **(NMMS - 2020 - 21)**

(1) தாமிரம் (2) வெள்ளி (3) காரீயம் (4) அலுமினியம்

LIVEWORKSHEETS